රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/01/02
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.03.01

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>இணைந்த சேவையின் உத்தியோகத்தர்களது நியமனத்தை உறுதிப்படுத்தலுக்கான பரிந்துரைத்தல் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை அனுப்புதல்.</u>**

மேற்படி விடயம் தொடர்பாக எனது இலக்கம் PA/CS/POLICY/Guidelines மற்றும் 24.08.2020 ஆம் திகதிய கடிதத்துக்கு மேலதிகமாகவாகும்.

02. அதன்படி, 01.01.2020 ஆம் திகதிக்குப் பிறகு, இணைந்த சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டு உங்கள் அமைச்சுக்கு /திணைக்களத்துக்கு/ அலுவலகத்துக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் உத்தியோகத்தர்களது நியமனத்தை உறுதிப்படுத்த தேவையான பரிந்துரைகள் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்போது PA/CS/POLICY/ Guidelines மற்றும் 24.08.2020 ஆம் திகதிய கடிதம் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும். அங்கு CSC-I படிவம் மற்றும் குறித்த ஆவணங்களை உத்தியோகத்தரது நியமனத் திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் அனுப்ப வேண்டும் என்பதோடு CSC-II படிவம் மற்றும் குறித்த ஆவணங்களை உத்தியோகத்தரது தகுதிகாண் காலம் / பதில் கடமை காலம் நிறைவடைந்தவுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

03. நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அரச செலவினங்களை மட்டுப்படுத்தல், எழுதுபொருட்களில் நிலவும் தட்டுப்பாடு முதலிய விடயங்கள் காரணமாக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களது நியமனத் திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் அனுப்ப வேண்டிய CSC-I படிவம் மற்றும் ஏராளமான ஏற்புடைய ஆவணங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பதோடு சில உத்தியோகத்தர்கள் நியமனத்தை உறுதி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்துள்ளதால், நியமனத்தை உறுதி செய்யும் போது ஏற்படக்கூடிய காலதாமதங்களைத் தவிர்க்கும் வகையில், இதுவரை CSC-I படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களது நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு, பரிந்துரைகளை (CSC-II படிவம் மூலம்) சமர்ப்பிக்கும் போதே CSC-I படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் போதுமானது.

04. எனவே, இந்த உத்தியோகத்தர்களது நியமனத் திகதி முதல் 06 மாதங்களுக்குள் அனுப்ப வேண்டிய CSC-I படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை இதுவரை சமர்ப்பிக்கவில்லையெனின், அந்தப் படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களையும் CSC-II படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே எனக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும், ஏற்கனவே CSC-I படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை அனுப்பியிருப்பின், உத்தியோகத்தரது தகுதிகாண் காலம் நிறைவடைந்தவுடன் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்களை அனுப்பும் போது CSC-II படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை மட்டும் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

05. மேலும், 01.01.2020 ஆம் திகதிக்குப் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குதல், தகுதிகாண் அறிக்கைகளை வழங்குதல் மற்றும் ஏனைய தாபனச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் அமைச்சின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள்/ தாபனத் தலைவர்களை அறிவுறுத்துவதற்காக வெளியிடப்பட்ட பின்வரும் கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மீது உங்கள் கவனத்தை செலுத்துமாறு மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

i. 01.01.2020 ஆம் திகதி நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்ட எனது இலக்கம் CS/DOS/Policy/01/02 மற்றும் 20.10.2020 ஆம் திகதிய கடிதம்
ii. 01.01.2021 ஆம் திகதி நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்ட எனது இலக்கம் CS/DOS/Policy/01/01(II) மற்றும் 19.05.2023 ஆம் திகதிய கடிதம்
iii. 2022 ஆம் ஆண்டில் நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்ட எனது இலக்கம் CS/DOS/Policy/16 மற்றும் 19.05.2023 ஆம் திகதிய கடிதம்

ஒப்பம்/ எஸ்.ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்